செ.வெ.எண். 19/டிசம்பர் தேதி : 16.12.2016

# தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2016-2017-ம் ஆண்டுக்கான முதல் அரவைப்பருவத்தினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.







தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், திம்மனஅள்ளியில் மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2016-2017-ம் ஆண்டுக்கான முதல் அரவைப்பருவ விழா இன்று (16.12.2016) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இவ்விழாவினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

நடப்பு அரவை பருவத்திற்கு 2,40,000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தினசரி 2,000 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யவும், தற்போது பரவலாக மழை பெய்துள்ளதை விவசாயிகள் பயன்படுத்தி 2016-17ம் ஆண்டில் அரவை பருவத்தில் 7600 ஏக்கர் கரும்பு சாகுபடி செய்து ஆலையின் முழு அரவை திறனை 2.40 இலட்சம் மெட்ரிக் டன்கள் அரவை செய்ய திட்டமிட்டுள்ளது. எனவே விவசாயிகள் சம்பந்தப்பட்ட கரும்பு துறை அலுவலர்களை அணுகி நடவிற்கு முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மேலும் நவீன தொழில் நுட்பமான நீடித்த நிலையான சாகுபடி முறையில் பயிரிட ஏதுவாக விவசாயிகளின் நிழல் வளை கூடங்கள், பரு நாற்றுகள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர்/மேலாண்மை இயக்குநர் திருமதி. துர்காமூர்த்தி, கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாகக்குழு தலைவர் திரு. கே.வி.ரங்கநாதன், கூட்டுறவு சர்க்கரை ஆலை கண்காணிப்பாளர் திரு. என். வெங்கடேசன், ஆலையின் நிர்வாகக்குழு உறுப்பினரும் மற்றும் தமிழக விவசாயிகள் சங்க தலைவர் திரு. எஸ்.எ.சின்னசாமி, பாலக்கோடு கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு. சாம்ராஜ், அதியமான் விவசாய சங்க தலைவர், ஆலையின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திரு. கொ. மாதப்பன், திரு. இராமகவுண்டர், தமிழக விவசாயிகள் சங்க கரும்பு பிரிவு செயலர் திரு. லோகநாதன், திரு. நஞ்சுண்டன், ஜெர்த்தலாவ்

தொடக்க வேளாண்மை சங்க தலைவர் திரு. வீரமணி மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.